Registered as a Newspaper in Ceylon　　விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU


மலர் 7　　இதழ் 33

National Tamil Daily　　தேசிய தினசரி

போன்: 389　　யாழ்ப்பாணம்　　தபால் பெட்டி எண்: 49

குரோதி மாசி 30　துல்கஃ பிறை 9　(13 3-65)　சனிக்கிழமை

## கடலில் போக விரும்பாத கப்பல்!



புயல் ஒரே தினத்தில் ஓய்ந்துவிட்டது. ஆனால் அது ஏற்படுத்திய 'வடு'க்கள் நீங்கவில்லை. நூற்றுக்கணக்கான பிரயாணிகளை இலங்கையிலிருந்து இந்தியாவுக்கும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கும் ஏற்றி இறக்கிய 'கப்பல்' "இனிக்கடல் வாழ்வு வேண்டாம், தரையிலேயே நிற்கப் போகிறேன்" என்று கருதிவிட்டதோ என்னவோ தலைமன்னார்க் கரையில் புயல் காற்று ஒதுக்கிய இடத்திலேயே இன்னமும் நிற்கிறது. ஏற்கனவே சேதமடைந்துள்ள இக்கப்பல் சரிந்து விழுந்து சேதமடையக்கூடிய அந்தர நிலையில் நிற்கின்றபோதிலும் அதைப்பாதுகாக்க மரங்களும் கட்டைகளும் அடுக்கி 'முண்டு' கொடுத்துவைத்திருக்கிறார்கள். அதற்குக் காவலும் வைக்கப்பட்டுள்ளது. இக்கப்பலில் இலங்கைக்குவந்ததாகக்கருதப்படும் சில பொருட்கள் கப்பலிலேயே இருக்கின்றனவா என்பது இன்னும் சரியாகத் தெரியவில்லை. சூறவளியால் சேதமடைந்த பாம்பன் பாலமும் மன்னார் தாம்போதிகளும் திருத்தப்பட்டுப் போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறுகின்றன. தலைமன்னார்-தனுஷ்கோடி கப்பல் சேவை இனித் தேவையில்லையோ?

# சதிவழக்கு: மேலும் இருவர் விடுதலை

## ஜயக்கொடி, வீரசிங்கா மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்

கொழும்பு, வெள்ளி

புரட்சிச் சதிவழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கப்டன் ஜயக்கொடியும் கப்டன் வீரசிங்காவும் இன்று விடுதலைசெய்யப்பட்டனர்.

சதிவழக்கின் பத்தாவது பிரதிவாதியான கப்டன் ஜயக்கொடியும் பன்னிரண்டாவது பிரதிவாதியான கப்டன் வீரசிங்காவும் விடுதலை செய்யப்படுவதாக இன்று நீதியரசர் அறிவித்ததும் நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் இருந்தவர்கள் ஆச்சரியமடைந்தனர். இவர்களிருவரும் விடுதலையடைந்ததும் அவர்களை வரவேற்பதற்கு அவர்களின் உறவினர் அங்கு இருக்கவில்லை. விடுதலை பெற்ற தகவல் கூட உறவினருக்கு அறிவிக்க முடியாதுபோய்விட்டது. காரணம் அவர்கள் அச்சமயம் ரோயல்—தோமியன் கிரிக்கட் விளையாட்டுப்போட்டியை பார்க்கச்சென்றிருந்தனர்.

### லட்சரூபாய் அதிர்ஷ்டசாலியார்?

கொழும்பு, வெள்ளி

நேற்று மாலை இழுக்கப்பட்ட கைத்தொழிற் பொருட்காட்சி சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
14 Z 0373　ரூபா 100,000
இரண்டாவது பரிசு
27 T 0457　ரூபா 14,740
மூன்றாவது பரிசு
01 B 0260　ரூபா 7,370

### தேசிய சுவீப் முடிவுகள்

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு
03 N 0122　ரூபா 20,940
இரண்டாவது பரிசு
09 T 0558　ரூபா 8,376
மூன்றாவது பரிசு
01 T 0661　ரூபா 2,094

### ராஷ்டிரபதி ஆட்சிக்கு ஆதரவு

புதுடில்லி, மார்ச் 12

கேரளத்தில் ராஷ்டிரபதி ஆட்சி நீடிப்பதை அந்த ராஜ்யத்தைச் சேர்ந்த பெரும்பாலான எம். பி க்கள் ஆதரிப்பதாகக் கூறப்படுகிறது. அங்கு 78 ஸ்தானங்களில் போட்டியிட்ட இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி, 133 ஸ்தானங்களில் போட்டியிட்ட காங்கிரஸை விட மும்மடங்கு அதிகப்பணம் செலவிட்டதாக அவர்கள்புகார் கூறினர்.

## "கூட்டு அரசாங்கத்தில் தமிழுக்கு சரியான அந்தஸ்து வடக்கு, கிழக்கில் கலைகளை வளர்க்க அரசாங்கம் உதவும்" —என். எம்.

— ஈழநாடு விசேஷ நிருபர் பேட்டி —

யாழ்ப்பாணம், வெள்ளி

கூட்டு அரசாங்கம் தமிழுக்குச் சரியான இடமளிக்குமென யாழ்ப்பாணம் வந்திருந்த நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா அளித்த விசேஷபேட்டியில் கூறினார். கேள்விகளும் பதில்களும் வருமாறு:-

கேள்வி: கூட்டு அரசாங்கம் மீண்டும் நிறுவப்பட்டால் தமிழர்களுக்கு எவ்வாறு உதவி செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள்?

பதில்: நாட்டின் இதர பகுதிகளிலுள்ள மக்களைப் போல் தமிழ் மக்களும் நடத்தப்படுவார்கள். நம்மை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள் ஏராளம். வேலையில்லாத்திண்டாட்டம், கைத்தொழில், தொழில்நுட்பக்கல்வி ஆகியன இவற்றில் சில அம்சங்கள். இப்பிரச்சினைகளைத் தீர்க்கமுனையும் போது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கைவிடப்படமாட்டாது.

கேள்வி: மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரை கூட்டு அரசாங்கம் இந்தியத் தலைவர்களைப் பின்பற்றி சிங்களத்துடன் ஆங்கிலத்தையும் துணை உத்தியோக மொழியாகக் கொள்ளுமா?

(6-ம் பக்கம் பார்க்க)

பஸ் நிலையகாணி சுவீகரிப்பை ஆதரித்து

## ஆர்ப்பாட்டம்

### பிரயாணிகள் சங்கம் திட்டம்; மேயர் யோசனைக்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் பஸ்நிலைய (மாதிரிச்சந்தை)க் காணியை நவீன பஸ்நிலையம் அமைக்கும் பொருட்டு கட்டாயமாகச் சுவீகரிப்பதற்கு காணி அமைச்சர் பிறப்பித்துள்ள உத்தரவுக்கு மாநகரசபை எதிர்ப்புத் தெரிவிக்கவிருப்பதை எதிர்த்து யாழ்ப்பாணம் பஸ்பிரயாணிகள் சங்கங்கள் சில ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

எதிர்ப்புஆர்ப்பாட்டம் பற்றி பல பிரயாணிகள் சங்கங்கள் சில இன்று கூடித் தீர்மானிக்கவிருக்கின்றன.

இதற்கிடையில் பஸ்நிலையக் காணி சுவீகரிப்பு சம்பந்தமாக மேயரைச் சந்தித்துப் பேச விரும்புவதாகவும் அதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தரும்படியும் வடபகுதி பஸ் புகைவிரத பிரயாணிகள் சங்கச் செயலாளரும் அரசாங்கத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளன பஸ், புகைவிரத பிரயாணிகள் சங்கச்செயலாளரும் மேயருக்கு அனுப்பிவைத்துள்ள ஒரு மகஜரில் கேட்டுள்ளனர்.

உங்கள் கட்டிடங்கள்
உறுதியாக இருப்பதற்கு
திறமான
★ இரும்புச் சாமான்களும்
★ பெயின்டுவகைகளும்
★ அஸ்பஸ் சீட்டுகளும்
★ மர வகைகளும்
எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.
விஷ்ணு
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
வல்வெட்டித்துறை

### இஸ்ரேல் நிபுணர் வருவர்

கொழும்பு, வெள்ளி

யாழ்ப்பாண மாவட்ட தண்ணீர்ப்பிரச்சினைபற்றி ஆராய்வதற்காக இஸ்ரேலிலிருந்து மேலும் சில நிபுணர்கள் இங்கு வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. இஸ்ரேலிய நிபுணர்களைத் தந்துதவுமாறு அரசாங்கம் இஸ்ரேலைக் கேட்க விரும்புவதாக அறியப்படுகிறது.

### சீனப் புகார்: ரஷ்யா நிராகரிப்பு

மாஸ்கோ, மார்ச் 12

சமீபத்தில் மாஸ்கோவில் அமெரிக்க தூதராலயத்துக்கு முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சீன மாணவர்களை, ரஷ்யத் துருப்புக்கள் நையப்புடைத்ததாய் பீகிங் தெரிவித்த குற்றச்சாட்டை ரஷ்யா நிராகரித்தது.

இதன் காரணமாக ரஷ்யாவிலுள்ள சீன மாணவர்களை திருப்பி அழைத்துக்கொள்ளப் போவதாய் பீகிங் தெரிவித்திருந்தது.

வடபகுதி அசைஸ் விசாரணை

## "பேக்கிங் பவுடர் பார்சலில் மண்ணும் சாம்பரும் இருந்தது"

### தலைமன்னார் கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

"காலஞ்சென்ற ஆரோக்கியத்திடம 150 ரூபாய் கொடுத்து 8 பேக்கிங் பவுடர் பார்சல்கள் வாங்கினேன். அவற்றைக் கொழும்பில் கொண்டுபோய் திறந்துபார்த்த பொழுது, பவுடருக்கு பதிலாக மண்ணும் சாம்பலும்தான் இருந்தன" என்று தலைமன்னார் கொலை வழக்கில் எதிரிகள் பக்க சார்பில் சாட்சியமளித்த சாகுல்ஹமீட் கூறினார்.

தலைமன்னார் கொலைவழக்கு இரண்டாவது தினமாக நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில், நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரிகள் தரப்பில் சாகுல் ஹமீட் சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் 63-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந் திகதி மரியான் செபஸ்தியாம்பிள்ளை, மரியான் சந்தியாப்பிள்ளை ஆகியோர் ஆரோக்கியம் மடுத்தீன் என்பவரைக் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

என் மகனே! ஒன்றுக்கும் பயப்படாதே. வெற்றிஉன் சொந்தம். எத்தனைமுறை தவறினாலும் தைரியத்தைக் கைவிடாதே. நீ ஒருநாளும் அழியமாட்டாய் எழுந்திரு. விழித்துக்கொள். நீ எங்கே போகிறாயோ அங்கே உன்னுடன் பகவான் வருகிறார். அவர் உனக்குள்ளாகவே தான் இருக்கின்றார்.

— ஸ்ரீ யோகசுவாமிகள்.

ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மாசி மீ 30 உ. (13-3-65)

## மன்னாரில் பாதாள நீரூற்று

மன்னார்ப் பகுதியில் ஆழ் கிணறுகளில் பாதாள நீரூற்று நிலைகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. இது பொதுவாக நாட்டு மக்களுக்கும் குறிப்பாக வடபகுதி மக்களுக்கும் மகிழ்ச்சியும் புது நம்பிக்கையும் அளிப்பதாகும்.

வட்மாணத்திலே இப்பொழுது சில இடங்களில் நீர்ப் பரிசோதனைகள் நடைபெற்று வருகின்றன. மன்னார்ப் பகுதியில் நடத்திய பரிசோதனையில் 150 அடி ஆழத்திற்கு குழாய்கள் செலுத்தப்பட்டபோது 90 அடி ஆழத்தில் உள்ள வெள்ளைக் கற்பாறையிலிருந்து நீரூற்று பீறிட்டு 20 அடி உயரத்துக்கு மேல் எழுந்ததாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கிணற்று நீரூற்றுக்கள் வரண்டு வருவதாகவும் இன்னும் சில வருடங்களில் இப்பகுதி பாலைவனமாகிவிடக்கூடிய ஆபத்து ஏற்படலாமென்றும் வெளிநாட்டு நிபுணர் ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்ததைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் மனதில் பெரும் பீதியேற்பட்டது. யாழ்ப்பாணப் பகுதியில் விவசாயிகள் கிணற்று நீரை விவசாயத்துக்கு அதிகமாகப் பயன்படுத்துவதாகவும் இதனால் நீர் ஊற்றுக்குறைந்து குடிதண்ணீருக்கே கஷ்டமேற்படலாமென்றும் நீர்ப்பாசன இலாகாவைச் சேர்ந்த நிபுணர்கள் கருதுவதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. என்றாலும் மன்னாரிலும் மற்றும் சில இடங்களிலும் இப்பொழுது நிலத்துக்கடியில் நடைபெறும் நீர் ஊற்றுப் பரிசோதனை யாழ்ப்பாண மாவட்டத்தில் பல இடங்களிலும் அதிக சிரத்தையுடன் நடைபெற்றால் நிச்சயம் பயன் கிடைக்கலாம்.

நிலத்துக்கடியில் இருநூறு முன்னூறு அடி ஆழத்தில் நீர் ஊற்று நிலைகள் நிச்சயம் இருக்கிறதென்பது பல நாடுகளிலும் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. தமிழ் நாட்டில் நெய்வேலித் திட்டத்தில் நிலத்துக்கடி நீர் ஊற்றிலிருந்து ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் விவசாயத்துக்குப் பயன்படுகிறது. மன்னார்ப் பகுதியில் சுமார் 200 அடி ஆழத்தில் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட நீர் ஊற்று யாழ்ப்பாணப் பகுதியிலும் அந்த வாய்ப்பு இருக்கிறதென்பதை உணர்த்தியுள்ளது. நிலத்துக்கடி நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடித்து குழாய்க் கிணறுகளை அமைத்துவிட்டால் மலைகளும் ஆறுகளும் நீர்வீழ்ச்சிகளும் இல்லாத வரண்ட பிரதேசமான யாழ்ப்பாணம் பாலைவனமாகிவிடும் ஆபத்து நீங்கி சோலைவனமாகும் வாய்ப்பு நிச்சயம் கிடைக்கும். நிலத்துக்கடி நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பதில் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியையும் தேவையானால் பெறுவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். நீர் ஊற்றுக்களைக் கண்டுபிடித்து குழாய்க் கிணறுகள் அமைத்துவிட்டால் இங்கு தண்ணீர் தட்டுப்பாடு வெகுவாக நீங்கிவிடும்.

## உங்கள் அபேட்சகர்கள்

### ஊர்காவற்றுறைத் தொகுதி

### திரு. வி. நவரத்தினம்



தமிழரசுக் கட்சியின் 'மூளை' எனவர்ணிக்கப்படும் திரு. நவரத்தினம் புரக்டராகத் தொழில் புரிந்து வருகிறார். பல வருடங்களாகவே முன்னரே அரசியலில் தீவிர பங்குகொண்டு உழைத்துவருபவர். மலைநாட்டில் தொழிற்சங்கம் அமைப்பதென்று தமிழரசுக்கட்சி மன்னார் மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியபொழுது திரு. நவரத்தினத்துக்கும் கட்சிமேலிடத்துக்கும் சிறிது கருத்து வேறுபாடு ஏற்பட்டதாயினும் கட்சிக்கொள்கையை உருவாக்கியவர்களில் ஒருவர் என்ற முறையில் கட்சியை ஆதரித்து வந்தார். 1952-ம் ஆண்டுநடைபெற்ற தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்றாராயினும் திரு வி. ஏ. கந்தையாவின் மறைவினால் 1963-ம் ஆண்டு நடைபெற்ற உபதேர்தலில் பத்தாயிரம் அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டினார். முன்பு கட்சிப் பொதுக் காரியதரிசியாகவும் பணியாற்றிய திரு. நவரத்தினம் இப்பொழுது கட்சித் தலைவர்களில் ஒருவராகப் பதவி வகிக்கிறார். 1956-ம் வருடத்திய பிரசித்திபெற்ற திருமலை யாத்திரை', 1961-ம் வருடத்திய 'சத்தியாக்கிரகம்' ஆகியவைகளுக்குத் திட்டமிட்டவர்களில் இவரே பெரும் பொறுப்புடையவர். தமிழரசுக் கட்சியின மொழியுரிமைப் போராட்டங்களின் காரணமாகத் தடுப்புக்காவலிலும் இருந்திருக்கிறார்.

### திரு. என். ரி. சிவஞானம்

தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகராக முதல்தடவையாக பார்லிமெண்ட் தேர்தலில் போட்டியிடும் திரு. சிவஞானம் யாழ்ப்பாணத்தில் புரக்டராகத் தொழில் புரிந்து வருகிறார். ஊர்காவற்றுறைப் பகுதியில் ஒரு கிராமசபை அங்கத்தவராகவும் பதவி வகித்துவரும் இவர் விவசாயத்துறையிலும் ஈடுபாடு கொண்டவர், வலை பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்திலும் பணிபுரிந்திருக்கிறார். இலங்கைச் சட்டசபையின் முன்னாள் சபாநாயகர் சேர் வைத்திலிங்கம் துரைசாமியின் மருமகன் திரு. சிவஞானம்.

---

பொதுத்தேர்தலும் அரசியல்கட்சிகளும் -6

# வவுனியா, மன்னார், நிந்தாவூர் அம்பாறை தொகுதிகள்

**வவுனியா** தொகுதியில் 1947-ம் ஆண்டில் திருவாளர்கள் சி. சுந்தரலிங்கமும் ரி. எம். சபாரத்தினமும் போட்டியிட்டனர். அப்பொழுது திரு. சுந்தரலிங்கம் 2708 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்றார். 1952-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது திருவாளர்கள் சி. சுந்தரலிங்கம், யு. பி. திசநாயகா, ரி. எம். சபாரத்தினம், கே. வேலுப்பிள்ளை ஆகியோர் போட்டியிட்டனர். அந்தத் தேர்தலிலும் திரு. சுந்தரலிங்கமே வெற்றி பெற்றார்.

1956-ம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலிலும் திரு. சி. சுந்தரலிங்கம் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடன் ஐ. தே. கட்சிசார்பில் போட்டியிட்ட திரு. பி. கந்தசேனகுரே 2003 வாக்குகள் பெற்றார்.

1956-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திரு. சுந்தரலிங்கமும், திரு. பி. ராமலிங்கமும் போட்டியிட்டனர், அச்சமயத்திலும் திரு சுந்தரலிங்கமே வெற்றி பெற்றார்.

1960-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திருவாளர்கள் டி. சிவசிதம்பரம், சி. சுந்தரலிங்கம், பி. முத்தையா, எஸ். சுப்பிரமணியம் ஆகியோர் போட்டியிட்டனர். அத்தேர்தலில் திரு. சிவசிதம்பரம் வெற்றி பெற்றார். 1960-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் திருவாளர்கள் ரி. சிவசிதம்பரம், ஜி. பி. வின்சென்ட் ஆகியோர் போட்டியிட்டனர், திரு சிவசிதம்பரமே மீண்டும் வெற்றி பெற்றார்.

1965-ம் ஆண்டு மார்ச் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் ஏ. குணசேகரா, டபிள்யூ. எஸ். பெரேரா, ஜி. பி. வின்சென்ட், எஸ். ஸ்ரீனிவாசன், வி. சிறிவர்தன, ரி. சிவசிதம்பரம், சி. சுந்தரலிங்கம் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதில் பதிவு செய்யப்பட்ட வாக்காளரின் தொகை 24,701.

**மன்னார்** தொகுதியில் 1947-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் சி. சிற்றம்பலம் ஜே தியாகராசா, எஸ். வீராசபிள்ளை ஆகியோர் போட்டியிட்டனர் சுயேச்சையாக போட்டியிட்ட திரு சிற்றம்பலம் அப்பொழுது வெற்றி பெற்றார் 1952-ம் ஆண்டுப் பொதுத்தேர்தலிலும் திரு சிற்றம்பலம் வெற்றியீட்டினார் அவருடன் அப்பொழுது திரு வி ஏ அழகக்கோன சுயேச்சையாக போட்டியிட்டார்.

1956-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் திரு. அழகக்கோனும், சேர். கந்தையா வைத்தியநாதனும் போட்டியிட்டனர். திரு. அழகக்கோன் அப்பொழுது தமிழரசுக் கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலிலும் ஜூலை தேர்தலிலும் திரு. அழகக்கோனே வெற்றி பெற்றார். அவருடன் மார்ச் தேர்தலில் திருவாளர்கள் ஏ. சி. எஸ். முகமதுவும், எஸ். ஜோன்மார்க்கும் ஜூலை மாதத் தேர்தலில், எஸ். ஏச் முகமதுவும் போட்டியிட்டனர்.

1965-ம் ஆண்டு மார்ச்மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் எம். எஸ். அப்துல்றகீம், வி ஏ. அழகக்கோன், எஸ ஜோன்மார்க் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் தொகை 21,418.

**நிந்தாவூர்** தொகுதியில் முதலில் 1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் திருவாளர்கள் எம். ஐ எம் அப்துல் மஜீத், எம் எம். முஸ்தபா, எம். மிர்சா, எம் செரீல் காதர் ஆகியோர் போட்டியிட்டனர் அப்பொழுது திரு மஜீத் வெற்றி பெற்றார் 1960-ம் ஆண்டு ஜூலை தேர்தலில் திருவாளர்கள் எம் ஐ எம் ஏ மஜீத், எம் ஏ எம் ஜலால்டீன் ஆகியோர் போட்டியிட்டனர் அப்பொழுதும் திரு மஜீத்தே வெற்றி பெற்றார். 1965-ம் ஆண்டு நடைபெறவிருக்கும் தேர்தலில் திரு. எம். ஐ எம் மஜீத் சுயேச்சையாகவும் திரு. முஸ்தபா ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலும் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளரின் தொகை 26,497.

**அம்பாறைத்** தொகுதியில் முதல் முதல் 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் திருவாளர்கள் வி. விஜயபாகுவிஜயசிங்க, எல. மகிவெல, ஏ. சீவரத்ன டி. சில்வா, கே. வி. அசோசிங்கோ ஏச். எம். அப்புகாமி, ஐ. சமரநாயகா ஆகியோர் போட்டியிட்டனர். அத்தேர்தலில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு வி. விஜயசிங்க வெற்றி பெற்றார். 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் திருவாளர்கள் இ. ஐ. டி. சொய்சா, டி. பி. குணத்திலக, எம். எஸ. மகிவெல ஆகியோர் போட்டியிட்டனர். அப்பொழுதும் சுதந்திரக்கட்சி அபேட்சகரான திரு. சொய்சாவே வெற்றி பெற்றார்.

1965-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் திருவாளர்கள் எம் எஸ. மகிவெல,, கே. சுபசிங்க, எஸ. சோமரத்ன ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத் தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 32,914.

**மட்டக்களப்புத்** தொகுதியில் 1947-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் ஏ. சின்னலெப்பை, கே. வி. எம். சுப்பிரமணியம், ஆர். வி. கதிர்காமர், எஸ் எல். இராசையா, இ. இராசையா ஆகியோர் போட்டியிட்டனர், 1952-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் ஆர். பி. கதிர்காமரும், ஏ. சின்னலெப்பையும் போட்டியிட்டனர், 1956-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் எஸ். இராசதுரை. ஏ. சின்னலெப்பை, ஆர். பி கதிர்காமர், ஏ. தவராசா ஆகியோர் போட்டியிட்டனர். 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவாளர்கள் சி. இராசதுரை, ஏ. ஆர். மாக்கான் மரைக்கார், மி. மயில்வாகனம் ஆகியோர் போட்டியிட்டனர். 1960-ம் ஆண்டு ஜூலை தேர்தலில் திருவாளர்கள் சி. இராசதுரை, ஏ. எச். மாக்கான் மரைக்கார், கே. எஸ். குமாரசாமி, ஏ. எல். சின்னலெப்பை ஆகியோர் போட்டியிட்டனர்.

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் திருவாளர்கள் சி. இராசதுரை, ஏ. எச். மாக்கான் மரைக்கார், ஏ. எல். சின்னலெப்பை, ஜே. எல். திசைவீரசிங்கம், எஸ். விஜயமணி, ஏ. எல். அலியார் லெப்பை, சீனித்தம்பி நடராசா ஆகியோர் போட்டியிடுகின்றனர். இத்தொகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை 45,078.

1947-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திரு. ஏ. சின்னலெப்பையும், 1952-ம் ஆண்டுத் தேர்தலில் ஆர். பி. கதிர்காமரும், 1956-ம் ஆண்டுத் தேர்தலில் திரு. எஸ. இராசதுரையும், 1960-ம் ஆண்டு மார்ச் தேர்தலில் திருவாளர்கள் சி. இராசதுரையும், ஏ. ஆர். மாக்கான்மரைக்காரும், 1960-ம் ஆண்டு ஜூலை தேர்தலில் திருவாளர்கள சி. இராசதுரையும், ஏ. எச் மாக்கான் மரைக்காரும் வெற்றிபெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## ஐயாறன்

### எழுதுவது

நம்மவர்கள் ஹாட், சூட், பூட் மாட்டிக்கொண்டு வெள்ளைக்காரர் போல் வேஷம் போடுவது இக்காலத்தில் சர்வ சகஜம். ஆனால் ஒரு வெள்ளைக்காரர் இடுப்பிலே நான்கு முழ வேட்டி கட்டி, வெறுங்காலுடனே, மேலுக்கு ஒன்றுமின்றி தெருவில் ஒரு தமிழர் போல் நடமாடுவதென்றால் அது அபூர்வமல்லவா? அதிலும் அந்த வெள்ளைக்காரர் செல்லச்சீமானும் முன்னாள் கவர்னர் ஜெனரலின் மகனுமாவாரென்றால் அதை ஓர் அதிசயமென்றுதானே கூற வேண்டும்!

அப்பேர்ப்பட்ட அதிசய புருஷர் யார் தெரியுமா? அவர்தான் சோல்பரி பிரபுவின் மகனான ராம்ஸ்போதம் எனும் ஸ்ரீசந்தசுவாமி. இந்தப்பெயர் அவருக்கு தீக்ஷா நாமமாக குருநாதர் யோகசுவாமிகள் அளித்ததாம்.

அன்று திருக்கேதீச்சரத்திலே சிவராத்திரிக்கு வந்து விரதமிருந்தார். மௌனம், சட்டைபோடுவதை விட்டுவிட்டார். சீமையிலே பிறந்த அவர் இலங்கையிலே குடியேறி துறவியாகி இன்று மட்டக்களப்பு செங்கலடியில் திறக்கப்படும் சிவதொண்டன் ஆசிரமத்தின் பொறுப்பை ஏற்கின்றார்.

• • •

சுமார் 75 ஆயிரம் ரூபாய் செலவில் இந்த ஆசிரமத்தை யார் கட்டியது தெரியுமா? கரம்பனைச் சேர்ந்த டாக்டர் வி. நடராசாவாம். இரண்டு வருடங்களிலும் கட்டிமுடிக்க முடியாத இக்கட்டடத்தை 11 மாதங்களுக்குள் கட்டிவிட்டதாயும் ஸ்ரீசந்தசுவாமியும் அந்த மற்ற கூலிஆட்களைப்போல் எந்த வேலையும் செய்து இதை வெற்றிகரமாக முடித்ததாயும், மிக எளிமையும் உயர்ந்த பண்பும், யோகசுவாமிகளின் பூரண அருளும்பெற்ற ஸ்ரீசந்தசுவாமியின் பொறுப்பிலே அந்த ஆசிரமம் மிகநல்ல பணிசெய்யுமென்றே எதிர்பார்க்கலாம்,

சமீபத்தில் வெளியான சிவதொண்டன் சிறப்பு மலரிலே ஸ்ரீசுவாமிகளைப் பற்றி அவர் தமிழிலேயே ஒரு சுருக்கமான செய்தி அனுப்பியுள்ளதைப் பார்த்தேன். என்ன தெரியுமா?

"தன்னைப்பார் இல்லாத் தலைவனை எழுதிக்காட்டிட என்னால் இசையுமோ எல்லாம் சரி உங்கள் சகாத் தொண்டன் சந்தசுவாமி"

ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்ட இந்த வெள்ளைக்காரர், தமிழ் கற்று, தூய தமிழில் எவ்வளவு அடக்கமாக அழகாக எழுதுகிறார்! அவர் இலங்கை மக்களின், தமிழ் மக்களின் பணிக்குக் கிடைக்கமுடிந்தது நமது பாக்கியமே. அவர் நீடூழி வாழ்க!

• • •

யாழ்ப்பாணத்திலிருந்து திருவடி ஊர்வலத்துடனே பல மக்கள் செங்கலடிக்கு இன்று அதிகாலை புறப்படுகிறார்கள். வடக்கையும் கிழக்கையும் மிகப் புனிதமாகப் பிணைக்கும் சிவதொண்டன் நிலையம் ஒரு வெள்ளைக்கார துறவியின் தலைமையில் நல்ல பணிகள் செய்து வெற்றியுடன் ஓங்கி வளர திருவருள் பாலித்துள்ளது. இது ஓர் உலக அதிசயம், நம்பக்கூடியதா? ஆனாலும் 'ராய்ட்டர்' ஸ்தாபனம் இச்செய்தியை உலகுக்குத் தெரிவிக்குமா?

---

## 60 பதட்லாவோ பலியாகினர்

லாங்பெங், மார்ச் 12 லாவோஸில் எற்பட்ட ஒரு தாக்குதலில் 60 பதட்லாவோ வீரர்கள் மாண்டதாய் அறிவிக்கப்படுகிறது. அரசாங்கத் துருப்புக்களில் 6 பேர் மாண்டனர்.

# ஜனாதிபதியின் வெள்ளை மாளிகையில் சிவில் உரிமை ஆர்ப்பாட்டம்

## நியூயோர்க்கில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு

### பொலிஸ் தாக்குதலில் ஒருவர் பலி

வாஷிங்டன், மார்ச் 12

**12 சிவில் உரிமை ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான வெள்ளை மாளிகையில் இனவேற்றுமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். வெள்ளைமாளிகையின் பிரதான வராந்தையில் அவர்கள் உட்கார்ந்து நீக்ரோ உரிமைபற்றிப் பாடல்களைப் பாடியவண்ணம் இருந்தனர் என்றும், கலைந்து செல்லுமாறு விடுத்த வேண்டுகோளை அவர்கள் புறக்கணித்துவிட்டனர் என்றும் வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் கூறினர்.**

வெள்ளைமாளிகையில் இவ்விதச் சம்பவம் நடைபெறுவது இதுவே முதல் தடவை எனக் கூறப்படுகிறது. ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு உட்கார்ந்தவுடன் வேறெவரும் அவ்வழியாக அனுமதிக்கப்படவில்லை. சம்பவம் நடைபெற்றபோது ஜனாதிபதி ஜோன்ஸன் மாளிகைக்குள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

**பெரும் ஆர்ப்பாட்டம்**

அதேசமயம் வருகிற ஞாயிற்றுக்கிழமை நியூயோர்க்கில் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நீக்ரோக்கள் நடத்தத் திட்டமிட்டிருக்கிறார்கள். இதற்கிடையில் நீதிமன்ற உத்தரவைமீறி டாக்டர் கிங் ஊர்வலம் நடத்தியதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை சமஷ்டி நீதிபதி நிராகரித்துவிட்டார்.

**தண்டிக்கப்படுவர்**

அதேசமயம் அலபாமாவில் நீக்ரோ ஊர்வலத்தில் மிருகத்தனமாக நடந்து கொண்ட ராஜ்ய பொலிசார் மீதும், துருப்புகள் மீதும் வழக்குத் தொடரப்படும் என அமெரிக்க அட்டோர்னி ஜெனரல் அறிவித்திருக்கிறார். பொலிசாரும், துருப்புகளும் கண்ணீர்ப்புகைப் பிரயோகித்ததும், இதர கொடுமைகள் புரிந்ததும் சமஷ்டி சட்டத்தை மீறிய செயல் என்றும் அவர் கூறினர்.

இந்த நடவடிக்கை காரணமாகக் காயமடைந்த ஒரு நீக்ரோ ஆஸ்பத்திரியில் மாண்டார்.

---

## ஹிந்தி பற்றி மத்திய கல்வி இலாகாவில் மாறுதல் இல்லை

### கல்வி மந்திரி சக்ளா அறிவிப்பு

புதுடில்லி, மார்ச் 12

ஹிந்தியை அபிவிருத்தி செய்து பரப்புவது சம்பந்தமாக ஹிந்தி பேசாத ராஜ்யங்களின் சம்மதத்துடனும், தீவிர ஒத்துழைப்புடனும் யூனியன் கல்வி மந்திராலயம் தனது கொள்கையைப் பின்பற்றி வருகிறது என கல்வி மந்திரி திரு சக்ளா, கல்வி ஆலோசனை கமிட்டிக் கூட்டத்தில் கூறினர்.

ஹிந்தி ஆட்சி மொழியாக்கப்பட்ட ஜனவரி 26-ம் திகதிக்குப்பின் இந்தக் கொள்கையில் எவ்வித மாறுதலும் இல்லை என்றும் அவர் கூறினர்.

பொது நிர்வாகத்தில் உபயோகிக்கப்படும் பதவிப்பெயர்கள் உட்பட நிர்வாகச்சொற்கள் பற்றிய பிரசுரத்தை வெளியிட்டது ஒன்றுடன் ஜனவரி 26-ம் திகதிக்குப் பின் எடுக்கப்பட்ட புதிய நடவடிக்கை என திரு. சக்ளா மேலும் தெரிவித்தார்.

தென்னாட்டில் ஹிந்தி ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிப்பது உட்பட ஹிந்தி கல்வியை பரப்புவது சம்பந்தமாக பல்வேறு விஷயங்கள் குறித்து ஒரு மணி நேரத்திற்கு மேல் விவாதம் நடைபெற்றது.

விஞ்ஞான, தொழில் நுட்ப புத்தகங்களுக்கு எல்லா பிராந்திய மொழிகளிலும் ஒரே மாதிரியான சொற்றொடர்களையே உபயோகிக்கவேண்டும் என அங்கத்தினர்கள் வற்புறுத்தினர். கூடியவரை சர்வதேச சொற்களையே உபயோகிக்கலாமெனச் சொல்லப்பட்டது.

---

## லண்டனில் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு

### ஜூன் 17-ல் ஆரம்பம்

லண்டன், மார்ச் 12

**வருகிற ஜூன் மாதம் 17ம் திகதி முதல் 25-ம் திகதிவரை காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாடு லண்டனில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. இந்த மகாநாட்டில் 21 காமன்வெல்த் நாடுகள் கலந்து கொள்ளும்.**

பிரிட்டனில் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தபின் நடைபெறும் முதலாவது காமன்வெல்த் பிரதமர்களின் மகாநாடு இதுவேயாகும்.

சென்ற மகாநாடு கடந்த ஜூலை மாதம் கன்சர்வேட்டிவ் பிரதமர் சர் அலெக் டக்ளஸ் ஹியூம் தலைமையில் லண்டனில் நடைபெற்றது.

அடுத்து நடைபெறவிருக்கும் மகாநாட்டில் தென்றொடீஷியா, பிரிட்டிஷ் குடியேற்றக் கட்டுப்பாடு, தென்னாபிரிக்கா, போர்த்துக்கீசிய காலனிகள் ஆகிய விஷயங்கள் பற்றி ஆலோசிக்கப்படும்.

மகாநாட்டில் காமன்வெல்த் நாடுகளின் சார்பாக ஜனாதிபதிகளும், பிரதம மந்திரிகளும் கலந்து கொள்வார்கள்.

இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய நாட்டுப் பிரதிநிதிகளுடன் பிரதமர் வில்சன் பிரிட்டிஷ் குடியேற்றப் பிரச்னைபற்றிக் குறிப்பாக ஆலோசிப்பார் எனத் தெரிகிறது.

---

## குப்தாவுக்கு ஜாமீன் மறுப்பு

புதுடில்லி, மார்ச் 12

சன்யால் கொலை வழக்கின் எதிர்தரப்பு வழக்கறிஞரான திரு. கே. கே. குப்தாவின் ஜாமீன் மனுவை ஜில்லா செஷன்ஸ் நீதிபதி நிராகரித்தார்.

---

## அண்ணாமலை பல்கலைக்கழகம்

சென்னை, மார்ச் 12

அண்ணாமலை பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படுவதை ஒரு சில மாணவர்களே எதிர்ப்பதாயும், ஆனால் பெரும்பான்மை மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்லவிரும்புவதாய், எதிர்ப்பாளர்கள் அவர்களுக்குக் குறுக்கே நிற்கக்கூடாதென்றும் உபவேந்தர் டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

---

## கோவா இணைப்புக்கு கண்டனம்

பஞ்சீம், மார்ச் 12

கோவாவை மகாராஷ்டிரத்துடன் இணைக்கவேண்டும் என்ற ராஜ்ய சட்டசபையில் நிறைவேற்றிய தீர்மானத்தை ஐக்கிய கோவா கட்சி கண்டித்திருக்கிறது.

---

## வியட்னும் பிரச்னை தீர ஜெனிவா மகாநாடு

### பிரான்ஸ் - ரஷ்யா உடன்பாடு

பாரிஸ், மார்ச் 12

வியட்னும் பிரச்னையைத்தீர்க்க ஜெனிவா மகாநாடு ஒன்றைக் கூட்டும் முயற்சியில் இறங்குவதென பிரான்சும் ரஷ்யாவும் உடன்பட்டிருக்கின்றன.

இது விஷயம் பற்றி அறிவித்த பாரிசிலுள்ள ரஷ்யத் தூதர் வியட்னும் பிரச்னைக்கு ராணுவத்தீர்வு சாத்தியமில்லை என்றும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதே சாத்தியம் என்றும் கூறினர்.

அதேசமயம் அமெரிக்க தாக்குதலுக்கு எதிராக, ரஷ்யா வடவியட்னுமுக்கு உதவிபுரியும் என்றும் அவர் கூறினர்.

ஐ. நா. காரியதரிசி யுதாண்ட் அமெரிக்கப் பிரதிநிதி ஸ்டீவன்சனுடன் வியட்னும் பற்றி தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருவதாக நியுயோர்க் செய்திகள் கூறின.

**தாக்குதல்**

அமெரிக்க ஜான்பராவெடி விமானங்கள் நேற்று தென் வியட்னுமில் இரு தாக்குதல்களை நடத்தின. இதன் விளைவாக ஒரு விமானம் நொருங்கியது. ஒரு ஹெலிகொப்டர் வீழ்த்தப்பட்டது. குண்டு வீச்சில் 4 கட்டடங்கள் சேதமடைந்தன.

---

## மே: ஜெர்மனிக்கு கஷ்டம் இல்லை

டூனிஸ், மார்ச் 12

அரபுநாடுகள மேற்கு ஜெர்மனியுடன் பொருளாதார பகிஷ்காரத்தில் ஈடுபட்டால் அதனால் மேற்கு ஜெர்மனிக்குக் கஷ்டம் ஏற்படாதென்றும், அரபு நாடுகளுக்கே அது கஷ்டத்தை ஏற்படுத்துமென்றும் டூனிஸிய ஜனாதிபதி போர்கீபா கூறினர். இஸ்ரேலுக்கு மேற்கு ஜெர்மன் ஆயுத உதவி நிறுத்தப்பட்டால் அதுவே பெரிய காரியம் என்றும் அவர் கூறினர்.

---

## அரிசியுடன் கற்கள் கலப்படம்

ஹைதராபாத், மார்ச் 12

ஆந்திர பிரதேசத்தில் நெல் அரைக்கும் பல்வேறு இடங்களில் அரிசியுடன் கலைத் தூளாக்கிக் கலப்படம் செய்கிறார்கள் என விவசாயமந்திரி திரு. பலராமரெட்டி கூறினர்.

---

## அயர்லாந்தில் பொதுத் தேர்தல்

டப்ளின், மார்ச் 12

அயர்லாந்து குடியரசில் உபதேர்தல் ஒன்றில் அரசாங்கக் கட்சிக்கு தோல்வி ஏற்பட்டதால் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி டிவேலாரா, பார்லிமெண்டைக் கலைத்து அடுத்த வசந்தகாலத்தில் தேர்தல் நடைபெறும் பிரகடனத்தை விடுப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

## திபேத்தில் சீன படைகுவிப்பு

புதுடில்லி, மார்ச் 12

இந்தியாவின் வடஎல்லை நெடுக திபேத்தில் 13 முதல் 16 வரையுள்ள சீனப்படைகளும், அவற்றிற்குத் துணையாக இதர சீனத்துருப்புகளும் குவிக்கப்பட்டிருக்கின்றன என பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் கூறினர்.

---

## அணைகட்ட நிபுணர் கமிட்டி

ஹைதராபாத், மார்ச் 12

கோதாவரி நதி மீது சாத்தியமானல் புதிய அணை ஒன்று கட்டுவது சம்பந்தமாக ஆலோசனை கூற நிபுணர் கமிட்டி ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது.

---

## ஷேக் அப்துல்லா பேட்டி

லண்டன், மார்ச் 12

தங்கள் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும் என்ற விஷயத்தில்காஷ்மீர்மக்கள் நிலைதிட உறுதியுடன் இருப்பதாகலண்டனில் பி பி ஸி பேட்டி ஒன்றில் ஷேக் அப்துல்லா கூறினர்.

பாகிஸ்தான் இவ்விஷயத்தை வற்புறுத்திவந்த போதிலும், இந்தியா அதைத் தவிர்த்துவருவதாய் அப்துல்லா குற்றஞ்சாட்டினர்,

---

## இந்தோனேஷிய - மலேஷியா சமரசப்பேச்சு முறிவு

### பல வட்டாரங்கள் ஏமாற்றம்

கோலாலம்பூர், மார்ச் 12

**இந்தோனேஷியா மலேஷியா தகராறில் பாகிஸ்தான் மத்தியஸ்தத்தை மலேஷியா விரும்பவில்லை எனக் கோலாலம்பூரில் அறிவிக்கப்பட்டது.**

இதேசமயம் பாங்காக்கில் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானுடன் நடத்தவிருந்த பேச்சுக்களை டாக்டர் சுகர்ணோ கைவிட்டது பல இடங்களில் ஏமாற்றத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

நேற்று ஸரவாக்கிலுள்ள குச்சிங்குக்குத் தெற்கே 60 இந்தோனேஷியர் பதுங்கியிருந்து எல்லைக்குள் திடீரெனப் புகமுனைந்தபோது மலேஷியபாதுகாப்புப் படைகள் அவர்களை தாக்கின. இதன் விளைவாக பல இந்தோனேஷியர் கொல்லப்பட்டனர் என்றும் மிகுதிப்பேர் வாபஸ் பெற்றதாயும் அறிவிக்கப்பட்டது. மலேஷியர்களுக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

துங்கு—சுகர்ணோ பேச்சு முறிந்ததற்கு மலேஷிய பிரதமர்தான் காரணம் என இந்தோனேஷிய குற்றஞ்சாட்டியிருக்கிறது. ஆனால் தாம் பேச்சுக்குத் தயாராய் இருந்ததாயும் பேச்சு நடைபெறும்போது புதிய ஊடுருவல் இருக்கக்கூடாது என்ற நிபந்தனை மட்டுமே விதித்ததாயும் துங்கு கூறினர்.

தென்கிழக்காசிய நெருக்கடி காரணமாக தற்போது இப்பிராந்தியத்தில்50000பிரிட்டிஷ் துருப்புகள் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

---

## பிரபல நாவலாசிரியர் மரணம்

அஹமதாபாத், மார்ச் 12

பிரபல குஜராத்தி இலக்கிய கர்த்தாவும், நாவலாசிரியரும், கவிஞருமான தெனமி சங்கர் ஜோஷி இங்கு காலமானர். அவருக்கு வயது 72. அவரது நூல்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

---

## கேரளம்

திருவனந்தபுரம், மார்ச் 12

கேரளத்தில் மந்திரிசபை ஏற்படுத்த சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுமென கேரள கவர்னரின் ஆலோசகர் திரு. கோவிந்தநாராயணன் கூறினர்'

# வெங்காய உற்பத்தியாளரின் குறைகளை நீக்குவோம்

## ஏழாலைக் கூட்டத்தில் நிதிமந்திரி வாக்குறுதி

மாவிட்டபுரம், வெள்ளி

வடபகுதி வெங்காய உற்பத்தியாளருக்கு இனி கஷ்டம் ஏற்படாதவாறு தாம் நடவடிக்கை எடுப்பதாகவும் வெங்காயத்தை உடனடியாகக் கொள்வனவுசெய்ய ஒழுங்குகள் செய்வதாகவும் நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா ஏழாலையில் நேற்று நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் உறுதியளித்தார்.

"உப உணவுப் பொருள்களான, வெங்காயம், செத்தல் மிளகாய் போன்றவற்றை பிறநாடுகளிலிருந்து இலங்கைக்கு வரவழைப்பதன் மூலம் இந்த நாட்டுக்கு பத்துகோடி ரூபாய் வரை வருடந்தோறும் நஷ்டம் ஏற்படுகிறது. இதனைத் தவிர்த்து உள்நாட்டிலேயே இவற்றை உற்பத்திசெய்து வெளிச்செலாவணியைக் கட்டுப்படுத்த கடந்த பட்ஜட்டில் பல திட்டங்களைக் கொண்டுவந்தேன் ஆனால் கூட்டரசாங்கம் வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து இவற்றைச் சரிவர அமுல்நடத்தமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. வெங்காயம் மற்றும் சில உணவுப் பொருள்களை இந்த நாட்டிலேயே உற்பத்திசெய்து அந்நியச்செலாவணியைக் குறைக்க அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்திருந்தபோதிலும் இப்பொருள்களை கமக்காரர்களிடமிருந்தும் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்தும் கொள்முதல் செய்வதில் குறிப்பாக கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபன ஊழியர்களும் கமத்தொழில் ஆணையாளர் பகுதி உத்தியோகத்தர்களும் அசிரத்தை காண்பித்துவந்த காரணத்தினால்தான், நாட்டில் இவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதுடன் இறக்குமதிசெய்ய வேண்டிய நிலையும்வந்தது. உற்பத்தியாளர்களின் வசதிகளைக் கவனித்து, இந்த உப உணவுப்பொருள்களை கொள்வனவு செய்வதற்கு இந்த உத்தியோகத்தர்கள் உரிய நேரத்தில் சரியான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால், குறிப்பாக யாழ்ப்பாண பகுதி மக்கள் பெருந்தொகையான வெங்காயத்தை உற்பத்திசெய்து குவித்துவைத்திருக்கவேண்டியதில்லை ஏற்பட்டிருக்காது. அதனுடன் வெங்காய உற்பத்தியாளர்களும் பெரும் சிரமம் அடைந்திருக்கத் தேவையில்லை" என்று டாக்டர் பெரேரா மேலும் கூறினார்.

காங்கேசன்துறை, உடுவில் தொகுதிகளின் ஐக்கிய இடதுசாரி அபேட்சகர்களான திரு. தி. வைகுந்தவாசன், திரு. பொ. நாகலிங்கம் ஆகியோரை ஆதரித்து ஏழாலை சி. வை. தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த சனசமூகநிலையத்துக்கு அண்மையிலுள்ள மைதானத்தில் இக் கூட்டம் நடைபெற்றது. திரு. க. சிவகுரு தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. டாக்டர் என். எம். பெரேரா மேலும் தெரிவித்ததாவது:

"உள்நாட்டு உற்பத்தியை அதிகரியுங்கள் என்று கூட்டரசாங்கம் ஒரு உருக்கமான வேண்டுகோளை விடுத்திருந்தது. நாட்டுவிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட உற்பத்தியாளர்கள் இதற்கு செவிமடுத்தார்கள். குறிப்பாக யாழ்ப்பாணப்பகுதி மக்கள் இந்தக் கோரிக்கையை ஏற்று ஏராளமான அளவு வெங்காயத்தை உற்பத்தி செய்தார்கள். ஆனால் அவற்றைக் கொள்வனவுசெய்வதில் இவர்களுக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

### ஊழியர்களின் கவனக்குறைவு

ஏராளமான அளவு வெங்காயம் உற்பத்திசெய்யப்பட்டிருப்பதாகவும் இவற்றை விற்பனைசெய்வதில் தங்களுக்கு பெரும் சிரமம் ஏற்படுவதாகவும் சில உற்பத்தியாளர் சங்கங்களும், தனிப்பட்டவர்களும் என்னிடம் முறையிட்டனர். உற்பத்தியாளரை ஊக்குவித்து நாட்டின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய அரசாங்கம் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வரும்பொழுது, சில அரசாங்க பகுதி ஊழியர்களின் கவனக்குறைவினால் வெங்காய உற்பத்தியாளருக்கு பெரும் சிரமம் ஏற்பட்டதுடன் அரசாங்கத்தின் உருப்படியான திட்டத்தை செயல்படுத்தவும்முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. யாழ்ப்பாணத்தொகுதி மக்கள் கூட்டரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று அதிகமான அளவு வெங்காயம் உற்பத்திசெய்தார்கள். ஆனால் அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்துக்கு குறிப்பிட்டபகுதி ஊழியர்களின் கவனக்குறைவே முகிய காரணமாக இருக்கிறது.

நான் கொழும்பு திரும்பியதும், இதுபற்றி முழு நடவடிக்கை எடுத்து இங்கு உற்பத்தி செய்யபபட்டுள்ள வெங்காயத்தை உடனடியாகக் கொள்வனவு செய்வதற்கு ஒழுங்குகள் செய்வேன். இப்படியான கஷ்டம் வருங்காலத்தில் வெங்காய உற்பத்தியாளருக்கு ஏற்படாதவகையில் நடவடிக்கை எடுப்பேன்,

### தமிழ் மக்களுக்கும் தாயாக விளங்குவார்

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ, தமது குழந்தைகளுக்கு மட்டுமின்றி, இந்த நாட்டிலுள்ள சகல குழந்தைகளுக்கும், மக்களுக்கும் ஒரு தாய். தமிழ் மக்களின் ஒரு தாயாகவிளங்கி தமிழ் மக்கள் எதிர் நோக்கியுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அவர் பெரும் அவா

(5-ம் பக்கம் பார்க்க)



சுகவீனத்தின்போது

புத்துணர்ச்சி தகை வல்லது

பாரசிடம்

ஒரு

கோலன்

காய்ச்சல் குணமுள்ள புருவத் திற்கு இதமளித்து சுக நித்திரையைத் தூண்டுகின்றது.

கைவசம் ஒரு போத்தலை வைத்திருங்கள்.

PAR 5/63

# "கூட்டரசாங்கம் மட்டுமே தமிழர் பிரச்னையைத் தீர்க்கும்"

—என். எம்.

உடுப்பிட்டி, வெள்ளி

"இந்த நாட்டின் முதலாளித்துவ அமைப்பைத் தகர்த்தெறிவதற்காக கம்யூனிஸ்ட் மற்றும் சமசமாஜக் கட்சித் தோழர்கள் திக்குத் திக்காக நின்று போராடிவருகிறார்கள். ஸ்ரீமாவின் தலைமையில் முற்போக்குச் சக்திகளும் பாட்டாளி-விவசாயவர்க்கமும் ஓரணிப்படும் மறுபக்கம் முதலாளித்துவ வாதிகள் திரு. டட்லி சேனநாயக்காவைத் தலைவராகக் கொண்டும் பலமான வர்க்கப் போராட்டம் நடத்துகிறார்கள்' பாராளுமன்றத்தில் மொத்தம் 36 உறுப்பினர்களைக் கொண்ட திரு. டட்லியால் தனித்துக் கூட்டரசாங்கத்தை வீழ்த்த முடியவில்லை, அப்பணியில் தமிழரசுக் கட்சியும் சி. பி. டி. சில்வாவின் தலைமையில் ஸ்ரீமாவின் கட்சிகளுள் இருந்த சில பிற்போக்குவாதிகளும் பங்கு கொண்டார்கள், உடுப்பிட்டி முன்னாள் எம். பி. திரு. மு. சிவசிதம்பரமும் நமது கூட்டரசாங்கத்துக்கெதிராக வாக்களித்தார். இவர் பாராளுமன்றத்தில் இருந்த காலத்தில் எப்பொழுதாவது தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசியதாக எனக்குத் தெரியாது இன்று தன்னைக் காங்கிரஸ் என்று கூறிக்கொள்கிறார்" இவ்வாறு நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா உடுப்பிட்டித் தொகுதி இடதுசாரி முன்னணி அபேட்சகர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினத்தையும் பருத்தித்துறைத் தொகுதி இடதுசாரி முன்னணி அபேட்சகர் திரு. கே. மோதிலால் நேருவையும் ஆதரிக்குமுகமாக மாலி சந்திக்கருகாமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர், அவர் மேலும் கூறியதாவது.

கூட்டரசாங்கத்தைத் தோற்கடித்ததன் மூலம் அரசியலில் இவர்கள் சாதித்தது என்ன?

கூட்டரசாங்கம் அமைக்கப்படு முன்னரும் அமைக்கப்பட்ட பிறகும் திரு. திருச்செல்வம் தமிழ் மக்களின் பிரச்னைபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துமுகமாக என்னைச் சந்தித்தார். அப்போது அவர் தாம் இதுபற்றிப் பிரதமரைச் சந்தித்துப் பேசியதாகவும் கூட்டரசாங்கத்துடன் தமிழர் பிரச்னைபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தத் தான் தயாராகவிருப்பதாகவும் கூறினார். மேலும் கூட்டரசாங்கத்தில் சமஷ்டிக் கட்சி கொண்டுள்ள நம்பிக்கையே தம்மை இந்தப் பேச்சுவார்த்தைக்குத் தூண்டியது என்றும் கூறினார். தமிழினத்தின் பிரச்னைகளுக்கு நியாயபூர்வமான தீர்ப்பைக் கொள்கையற்ற யு. என். பி அரசாங்கத்தால் நிச்சயம் கொடுக்க முடியாது. நமது கூட்டரசாங்கத்தினால்தான் மொழிப் பிரச்னையைத் தீர்க்க முடியும் மொழிப் பிரச்னை தீர்க்கதும் நாட்டின் சகல பிரச்னைகளும் தீர்ந்துவிடுமா? வடக்கிலும் தெற்கிலும் வேலையில்லாத் திண்டாட்டம் இன்று மிகமுக்கிய பிரச்னை 400 புதிய கைத்தொழில்களுக்குக் கூட்டரசாங்கம் வகை செய்துள்ளது. தொழிற்சாலைகளை ஒரு சில ஆண்டுகளில் கட்டிவிடமுடியாது. படிப்படியாகவே இவற்றுக்கான அத்திவாரக் கட்டிடம் கட்டப்படவேண்டும்.

கடந்த 65 ஆண்டுகளாக பிறநாட்டு எண்ணெய்க் கம்பெனிகள் ஆண்டுக்கு 5 கோடி ரூபாவை நிகரலாபமாக இந்நாட்டிலிருந்து எடுத்துச் சென்றன. கடந்த ஆண்டில் உட்டரசாங்கம் எண்ணெய்க் கூட்டுஸ்தாபனத்திலிருந்து 3 கோடி ரூபாவை லாபமாகப பெற்றது. கார் பற்றிகள், சேட்வகைகள், காலணிகள், பிஸ்கட்டுகள் முதலியவற்றைக் கணிசமான அளவில் நாம் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறோம். சிறந்த பொருளாதாரத்திக்கு நாம் வழி காட்டுகிறோம்.

திரு. எச். ஜீ. எஸ். இரத்தினவீரபேசுகையில், "டாக்டர் என். எம். நிதியமைச்சர் பதவி ஏற்றபின்னர் அவர் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடத்தவில்லையென்று சிங்களப் பத்திரிகைகள் குறை கூறுகின்றன வென்றும் மலைநாட்டுத் தமிழரின் பிரச்சினை

(5-ம் பக்கம் பார்க்க)

ஹைவிட்டாமீல்

என்பதின் பொருள்

உங்கள் பண்ணை

உயிரினங்களிலிருந்து

ஆகக்கூடுதல் ஆதாயத்தை

பெறுவீர்கள் என்பதே.

கால் நடைகளினதும், கோழி முதலிய பறவைகளினதும் எல்லா தீன்களும் ஒரே மாதிரிதான் என்பதாக அனேகர் கருதுகிறார்கள். அவை அப்படியல்ல. அவற்றில் அனேக வித்தியாசங்கள் இருக்கின்றன. வித்தியாசங்கள் என்பது நீங்கள் அடையும் கூடுதல் அல்லது குறைந்த ஆதாயத்தை கொடுப்பதுதான்.

ஏனெனில் ஹைவிட்டா

* கூடுதல், போஷாக்கையும் தாதுப் பொருட்களைக்கொண்ட கால்நடைத் தீனி.
* இலகுவாக கலந்து உடனடியாக சீரணமாகிறது.
* அதி நவீன பக்குவ முறைப்படி கட்டுப்பாடான நிலைமைகளில் ஆரோக்கியமான விதத்தில் நெடுங்காலம் கெட்டுப்போகாமல் இருக்கக் கூடியதாக தயாரிக்கப்படுகிறது.
* கோழிக்குஞ்சுகளுக்கும், நடுத்தரகோழிகளுக்கும் முட்டையிடும் கோழிகளுக்கும்இன்றியமையாத ஓர் கலவை தீன்.

உங்கள் பண்ணையில் உயிரினங்களுக்கான ஆதாயத்தை கொடுக்கும் தீனியை வாங்க திட்டமிடும்போது ஹைவிட்டா தீனியையே வாங்குவதென திட்டமிடுங்கள்,

HYVITA

ஹைவிட்டா உற்பத்திப் பொருட்கள், ஜா-எல மில்ஸ், ஜா-எல

டெலிபோன்: ஜா-எல-216. கொழும்பு-5767

# வெங்காய உற்பத்தியாளரின்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டுள்ளார். உங்களின் ஆதரவுடன் இந்த நாட்டை வளம் கொழிக்கும் பூமியாக்க அவர் நேசகரம் நீட்டுகின்றார், கருத்து வேறுபாடுகாட்டாது நீங்கள், பிரதமருக்கு முழு ஆதரவு அளிப்பீர்கள் என்பது எனது திடமான நம்பிக்கை.

இந்திய-சீன எல்லைத்தகராற்றில் சமாதானத்தை நிலைநாட்டி இரு நாடுகளுக்கு மிடையே ஒரு சமரசமான முடிவை ஏற்படுத்துவதில் பிரதமர் மிகவும் சிரத்தை காட்டியுள்ளார். நெருக்கடியை நீடிக்கவிடாது, உலக சமாதானத்தைக் காப்பாற்றிய பெருமை எமது பிரதமரையே சாரும். தென்வியட்னாமில் ஆட்சியாளர்களின் அட்டூழியங்களை எதிர்த்து பௌத்த பிக்குகள் தீமூட்டு தற்கொலை செய்து கொள்வதை உலகின் கவனத்துக்குக் கொண்டு வந்து பௌத்த மதத்தை அங்கு பாதுகாக்க முயற்சித்த பெருமையும் எமது பிரதமரைச் சாரும். இப்படியாக பல சர்வதேச நெருக்கடிகளைத் தீர்த்து வைக்க பிரதமர் பெரும் சிரத்தை எடுத்து வந்திருக்கிறார் இதைப்போல பிரதமர் உள்நாட்டுத் தகராறுகளையும் உரிய காலத்தில் தீர்த்து வைப்பார். அதில் முழு நம்பிக்கை வைக்கலாம்.

தமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இப்பொழுது உச்சநிலையை அடைந்திருக்கிறது. ஏராளமான படித்த வாலிபர்கள் இப்பொழுது வடக்கு மாகாணத்தில் இருக்கின்றனர் இவர்களைப் போன்று தென் இலங்கையிலும் ஏராளமான அளவு படித்த வாலிபர்கள் வேலை இல்லாது இருக்கின்றார்கள். வேலை இல்லாத் திண்டாட்டத்தை உடனடியாகத் தீர்க்க முடியாவிட்டாலும், கூட்டரசாங்கத்தின் திட்டங்கள், இதற்கு ஓரளவு முடிவை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது. நாட்டின் பல பகுதிகளிலும் இப்பொழுது பல கைத்தொழில் ஸ்தாபனங்கள் இயங்குகின்றன. இவை, வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கட்டுப்படுத்த பயன்படுகிறது. இதனுடன் எந்த ஒரு பகுதியில் மூலப்பொருள்கள் கிடைத்தாலும் அங்கு, கைத்தொழில் ஸ்தாபனத்தை நிறுவ அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது.

எதிர்காலப் பொருளாதாரம் படித்த வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதில் தான் தங்கியிருக்கிறது என்பதை அரசாங்கம் கண்டுணர்ந்திருக்கிறது.

தமிழ் மக்களின் பிரச்னைகளை, கூட்டரசாங்கத்தினால் மட்டுமே தீர்க்கமுடியும். இது அசைக்கமுடியாத, ஆணித்தரமான உண்மை.

கொழும்பு மாநகர சபை அங்கத்தவர் திரு. எச். ஜி. எஸ். இரத்னவீரா பேசுகையில், இனவெறிக் கொள்கைகளுடைய கட்சிகளினால் எமது நாடு சீரழிக்கப்பட்டுவரும் இச்சமயத்தில் அவர்களுக்கு ஆதரவு இங்கு அருகிக்கொண்டுவருகிறது என்றும் கூட்டரசாங்கத்தை வீழ்த்த நாட்டின் முன்னேற்றத்தைக் தடைசெய்வதில் இக்கட்சிகள் முனைந்திருக்கின்றன என்றும் இக்கட்சிகளுக்கு மக்கள் நல்ல சவுக்கடி கொடுக்கவேண்டுமென்றும் கூறினர்.

திரு. கி. வைகுந்தவாசன் பேசுகையில்: தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுக்க இடதுசாரி ஐக்கிய முன்னணி கூட்டரசாங்கத்தினால் மட்டுமே முடியும் என்பதை தமிழ் மக்கள் இப்பொழுது நன்கு உணர்ந்து விட்டார்கள் என்றும் இதனை இம்முறை தமிழ் மக்கள் செயல்படுத்துவார்கள் என்பது தனது திடமான நம்பிக்கை யென்றும் கூறினர்.

திரு. பொ. நாகலிங்கம் பேசுகையில், நாட்டின் முன்னேற்றத்தை சீர்குலைக்கும் சில கட்சிகளுடன் தமிழரசும் சேர்ந்து விட்டது என்றும் ஆனால் எதிர் வரும் பொதுத் தேர்தலில் பிற்போக்கு சக்திகள் முறியடிக்கப்பட்டு கூட்டரசாங்கம் மீண்டும் பதவிக்கு வரும் என்பது அசைக்கமுடியாத உண்மை என்றும் இதனைத் தமிழ்மக்கள் நன்குணர்ந்து தேர்தலில் வாக்களிக்கவேண்டும் என்றும் கூறினர். கூட்டத்தில் மற்றும் பலரும் பேசினர்.

REGAL — JAFFNA
NOW SHOWING
PAUL NEWMAN
in M. G. M's
THE PRIZE
(Panavision - Metrocolor)

2- வது மாதம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
தினசரி 6-30, 9-30



ஜெமினி கணேசன்
சாவித்திரி
மற்றும் பலர் நடிக்கும்
கற்பகம்

# "சமஷ்டி என்ற இணைப்பாட்சி மூலமே உரிமை பெறலாம்"

## தமிழரசுக்கட்சிக் காரியதரிசி விளக்கம்

உடுப்பிட்டி, வெள்ளி

"அரசியலில் தனிப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது, இலங்கையின் சரித்திரத்தில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த இத்தேர்தலில் தென்னிலங்கையில் இடதுசாரிக் கோஷ்டியும் வலதுசாரிக் கோஷ்டியும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு மோதிக் கொண்டிருக்கின்றன: இவற்றின் பின்னணியில் வெளிநாட்டு வல்லரசுகளும் ஆயத்தமாக நிற்கின்றனவென்பது சமீபகால சம்பவங்களிலிருந்து தெளிவாகத் தெரிகிறது இலங்கைவாழ் தமிழர்களைப்பொறுத்தவரையில் இந்த அதிகாரப் போட்டியில் பங்கற்றவர்களாக ஓர் அடிமை இனமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்போட்டியின் பயனாகத் தமிழ் பேசும் இனத்தின் தலைவிதியை ஓரளவுக்காவது மாற்றியமைக்கும் சந்தர்ப்பம் இத்தேர்தலின் பின் கிடைக்கும் என்று எதிர் பார்க்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இழந்துவிட்ட எமது உரிமைகளை மீண்டும் பெறவேண்டுமானல் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஓரே கட்டுப்பாடான கட்சியின்கீழ் தெரிவுசெய்யப் படவேண்டியது அவசியம்."

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சிச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் உடுப்பிட்டித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. க. ஜெயக்கொடியை ஆதரிக்குமுகமாக கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலுக் கண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

பாராளுமன்றத்திற்கு வெளியே அடுத்தடுத்து நடத்திய போராட்டங்களினாலும், கிளர்ச்சிகளினாலும் தமிழ்பேசும் இனத்தின் உரிமைகளை மறுத்து நிம்மதியான ஆட்சி நடத்த முடியாது என்றும் சிங்கள மக்களுடைய ஜனநாயக உரிமைகளையும் பறிக்கும் அவசரகாலச்சட்டத்தின் மூலமே ஆட்சி செய்ய முடியும் என்பதையும் ஆட்சியாளரை அறியச்செய்துள்ளோம். கரைபுரண்டோடி வந்த சிங்கள ஏகாதிபத்திய வெள்ளத்தை ஓரளவுக்கு அணைபோட்டு நாம் தடுத்து நிறுத்தியுள்ளோம். சமஷ்டி என்று கூறப்படும் இணைப்பாட்சி ஒன்றின் மூலமே இலங்கையின் ஐக்கியத்தைக் குலையாமல் நமது ஆட்சியுரிமையைப் பெறமுடியும். சுயாதீனம் நமது பிறப்புரிமை அது கிடைக்கும்வரையில் அயராது உழைப்போம். உயிரைவிட மேலான தியாகங்களையும் செய்யத்தயாராகவுள்ளோம். மலைநாட்டுத் தமிழ் மக்களுடைய விருப்பத்திற்கு மாறாக எவரையும் நாடுகடத்துவதை எதிர்க்கவும் இந்நாட்டைத் தமது தாயகமாக்கிக் கொண்டிருக்கின்ற தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரணபிரஜாவுரிமை உண்டென்று நிலைநாட்டவும் தமிழரசுக்கட்சி சங்கற்பம் பூண்டுள்ளது."

உடுப்பிட்டித் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. க. ஜெயக்கொடி பேசுகையில், "தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளான தமிழரசுக்காரர்களின் ஒத்துழைப்பின்றி எந்த அரசாங்கமும் இயங்கமுடியாது என்

(6-ம் பக்கம் பார்க்க)

# "கூட்டரசாங்கம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
பற்றி யு. என். பி.யின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு சொல்லுந்தானும் கிடையாதென்றும் யு. என். பி.யின் யாழ்ப்பாணக்கிளையே தமிழ் காங்கிரஸ் கட்சியெனவும் கூறினர். இலங்கையில் தினமும் 2000 குழந்தைகள் பிறக்கின்றன. ஆனல் ஒரு நாளில் 1000 பேர் இறக்கிறார்கள். தினசரி 250 தம்பதிகள் திருமணம் செய்கிறார்கள். இதனுல் 250 புதிய வீடுகள் தினமும் தேவைப்படுகின்றன. இந்த கையபிரச்சினைகளை சிறிமாவோ உணர்ந்து முற்போக்கு சக்திகளுடன் இணைந்து கூட்டரசாங்கம் அமைத்தபோதுதான் இந்நாட்டின் பிற்போக்கு சக்திகள் இணைந்து நம்மை எதிர்த்தன. ஒரு காலத்தில் பிற்போக்கு வகுப்புவாதக் கட்சியாகவிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி இன்று புனிதமாக்கப்பட்டுவிட்டது. 1954-ல் சமஷ்டி கிடையாவிடில் தனிநாட்டுக்காகப் போராடுவோம் என்று சமஷ்டிக்கட்சி கூறியது. சமஷ்டி அரசியலை ஏற்படுத்த முடியாதவர்களால் எவ்வாறு தனிநாடு என்ற திட்டத்தைக் கொண்டுவரமுடியும்?" என்று கூறினர்;

பருத்தித்துறைத் தொகுதி ஐக்கிய இடதுசாரி அபேட்சகர் திரு. கே. மோதிலால் நேரு பேசியபின், உடுப்பிட்டித்தொகுதி ஐக்கிய இடதுசாரி அபேட்சகர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் பேசுகையில், நமது பதினான்கு அம்சத் திட்டத்தின்படி பிரதேச சுயாட்சியும் நியாயமான தமிழுரிமையும் வழங்குவதாகவிருந்தோம். அவசரப்பட்டுத் தமிழரசுக்கட்சி கூட்டரசாங்கத்தை வீழ்த்திவிட்டதென்றார்,

திரு. எஸ். நாகராஜா, உட்படப் பலர் பேசினர்.

கூட்டத்திற்கு அட்வகேட் திரு. எஸ். ஜெயசிங்கம் தலைமை தாங்கினார்.

## தேவை

எமது கைத்தொழில் ஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள மனேஜரும், வான் சேல்ஸ் மனும் தேவை. திறமைக்கேற்ப சம்பளம். பிணைப்பணமாக மனேஜர் ரூபா 2000/-, வான் சேல்ஸ்மென் ரூபா 1500/-ம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். சசிமலா இன்டஸ்ரீஸ், 72/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1780

## அறிவித்தல்

11-வது ஆண்டு நிறைவு விழாவையும், தமிழ், சிங்கள புதுவருடத்தையும் முன்னிட்டு மிகப் பிரசித்திபெற்ற சின்னக்கம் பிறின்ஸ் 25-4-65 வரை அமைச்சலார். 1667

வரி விளம்பரம்

## விற்பனைக்கு

எங்கள் தயாரிப்பிலுள்ள "டோக்" மார்க் அலுமினியம் பாத்திரங்கள் குறைந்த விலையில் எம்மிடம் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்.

எவர்சில்வர் மாளிகை, 241, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1743

யாழ்ப்பாணம் கொட்டடி பெரிய தெரு வாடி வீட்டெல்லை 40 குளி நிலமும். வீடும் விற்பனைக்குண்டு. விபரம் கல்லூரி வீதி, சிராவியடி. 1783

## வாடகைக்கு

உடுவில் ஜேட்டில், மருதனார்மடச் சந்திக்கு அருகாமையில் "நல்லம்மா வாசகம்" என்ற வீடு சகல வசதிகளுடனும், தண்ணீர் (மோட்டார்) மின்சார வசதிகளுடனும் வாடகைக்குண்டு. விண்ணப்பிக்கவும்: நா. சோமசுந்தரம், தன்மக்கேணித்தோட்டம், பளை. 1785

## தேவை

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. இன் போசனப்பகுதியை கொண்டு நடத்துவதற்கு (Caterer) ஒருவர்தேவை. விபரங்கட்கு: காரியதரிசி, வை. எம். சி. ஏ. 24-3-65 க்கு முன் விண்ணப்பிக்கவும். 1779

## அங்கத்தவர்கள் தேவை

தீவுப்பகுதி ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம், கரம்பொன், ஊர்காவற்றுறை. அங்கத்தவராய்ச் சேர்ந்துவிட்டீர்களா? பங்குகள் விநியோகிக்கப்படுகின்றன. செயலாளருடன் தொடர்பு கொள்ளவும். 1772

கோவில் கும்பாபிஷேகங்களுக்கு
தேவையான
# அஷ்டபந்தன மருந்து

★ கோவில்அபிஷேகம், திருவிழாக்கள்
★ திருமண விழாக்கள்
★ புதுமனைப் பிரவேசம்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளைவு சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும்
மற்றும்
சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

★ மயில் மார்க் சந்தன வில்லைகள்
★ சுகந்த சந்தனப பவுடர்
★ பச்சைச் சந்தனம்
(உடன் யந்திரத்தினுல் அரைத்தது)

எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

எஸ்.
## சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் வியாபாரம்)
53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 541
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# "தமிழரின் பிரச்னைகள் தீர்த்துவைக்கப்படும்"

## யாழ்ப்பாணத்தில் நிதிமந்திரி அளித்த உறுதிமொழி

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ்பேசும் மக்களுடைய முக்கிய பிரச்னையான மொழிப்பிரச்னைக்கு ஸ்ரீமாவோவின் தலைமையில் ஆட்சி அமைக்கப்பெறும் கூட்டரசாங்கம் நீதியும் நியாயமும் வழங்குமென உறுதி தருவதாக நல்லூரில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் பேசிய நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா தெரிவித்தார்.

நல்லூர்த் தொகுதி ஐக்கிய இடதுசாரி அபேட்சகர் திரு அ. விசுவநாதனை ஆதரிக்குமுகமாக நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் டாக்டர் சி. இராஜசூரியர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் டாக்டர் என். எம். பெரேரா மேலும் சொன்னதாவது:

"ஸ்ரீமாவோ அரசாங்கத்துடன் நாம் கூட்டணி அமைத்தபோது முதல்முதலாகப் பிரதமர் ஸ்ரீமாவோவுடன் தமிழ் மக்களுடைய பிரச்னைகளைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினேன். தமிழர்களுடைய முக்கிய பிரச்னைகளையெல்லாம் அவருக்குத்தெட்டத்தெளிவாக எடுத்து விளக்கினேன். பிரதமர் அவைகளை மனப்பூர்வமாக ஏற்று ஆவனசெய்வதாக வாக்களித்தார். ஆனால் எம்மை இணைந்து நின்று செயலாற்றுவதற்கும், தமிழ்மக்களுடைய பிரச்னைகளைத் தீர்த்துவைப்பதற்கும் தமிழ்மக்களுக்காக உழைக்கிறோமென்று சொல்லிக்கொண்டிருக்கும் தமிழரசுக்கட்சியினர் விட்டுவைத்தார்களா?

பண்டா-செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது திரு. பண்டாரநாயகா இலங்கையைத் தமிழ்மக்களுக்கு விற்றுவிட்டதாகப் பிரசாரம்செய்த இனத்துவேஷிகளான யு. என். பி அரசாங்கம் தமிழ்மக்களுடைய பிரச்னைகளைத் தீர்த்துவைக்குமென்று தமிழ்மக்கள் கனவிலும்கூட நினைக்கமுடியாது. தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கக்கூடிய ஒரேயொரு கட்சி ஸ்ரீமாவோவின் தலைமையில் திரண்டிருக்கும் லங்கா சமசமாஜ- கம்யூனிஸ்ட் - ஸ்ரீலங்கா சுதந்திர கூட்டணி கட்சியைவிட வேறொன்றாக இருக்கமுடியாது.

"கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பும் பின்பும் தமிழரசுக்கட்சி பிரமுகரான திரு திருச்செல்வத்துடன் தமிழ்மொழி பிரச்னை பற்றி பேச்சுவார்த்தைகள் நடத்தினேன், நல்லதொரு நட்புறவான முறையில் நடைபெற்ற எமது பேச்சுவார்த்தையின் விளைவாக தமிழ் மக்களுக்குப் பயன் கொடுக்கக் கூடிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்ட கட்டத்தில் எமது கூட்டரசாங்கத்தை வீழ்த்திவிட்டார்கள்" என்றும் அவர் சொன்னார்.

முதலாளித்துவ ஏகாதிபத்தியத்துக்கு முடிவிழா வைத்து முற்போக்கான கொள்கைகளை செயலாற்றி வைப்பதற்கு சிறந்ததொரு அணி கூட்டரசாங்கம்தான்" என்றும் கூறினர்.

யாழ்ப்பாணம் மாநகரசபை அங்கத்தவர் திரு. எஸ். நாகராசா, நல்லூர்த் தொகுதி அபேட்சகர் திரு. அ. விசுவநாதன், திரு. அந்தனி ஜீவா, திரு. குணரத்தினம், கணேஷ்வரன் உட்பட வேறுபலரும் பேசினர்.

# யாழ். பொலிசாரின் ஜரூர் நடவடிக்கைகள்

## பாதுகாப்பில் அறுவர்; 5 சைக்கிள்கள் பிடிபட்டன

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பொலிசாரின் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து நாட்டில் செயல்பட்டுவரும் சைக்கிள் திருடர்கள் தொடர்ச்சியாக பொலிஸாரின் வலையில் விழ்ந்துவருகின்றனர்.

யாழ்ப்பாண நகரிலும் சுற்றுப்புறங்களிலும் பரவலாகத் தங்களது கைவரிசைகளைக் காட்டிவரும் சைக்கிள் திருடர் கோஷ்டியொன்று நேற்று மாலை பொலிஸாரிடம் அகப்பட்டது.

யாழ்ப்பாணப் பொலிஸ் குற்றப் பிரிவுப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எம். ஆர். சௌந்தரநாயகம், சப் இன்ஸ்பெக்டர் திரு. அலுவிகாரை ஆகியோரின் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் ஆறு நபர்களைச் சந்தேகத்தின் மீது கைது செய்ததுடன் ஐந்து சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

சவுரி செல்வம், ஆழ்வார் நடராஜா, ஜெயனுலாப்தீன், திருநாவுக்கரசு, பொன்னம்பலம், கதிர்காமர் ஆகிய ஆறு பேரும் தற்பொழுது யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

சைக்கிள் திருடர்களைக் கண்டுபிடிப்பதில் யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

# நிலைமையை சுமுகமாக்கி பிரச்னையை தீர்க்க வழிவிடுக

## மாணவருக்கு அண்ணுதுரை கோரிக்கை

புதுடில்லி, மார்ச்

ஆட்சி மொழிப் பிரச்னையில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதில் மத்திய அரசாங்கம் தீவிர முயற்சிகள் எடுத்து வரும் இக்கட்டத்தில் மாணவர்கள் பொறுமையுடன் வகுப்புகளுக்குத் திரும்ப வேண்டியது மிகவும் அவசியம் என்று தி. மு. க. பொதுக் காரியதரிசி திரு. சி. என். அண்ணுதுரை புதுடில்லியில் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அரசியலைப் பற்றி அறிந்துகொள்ளலாமே தவிர அரசியலில் செயலான முறையில் மாணவர்கள் ஈடுபடக் கூடாது என்றும் திரு. அண்ணுதுரை தெரிவித்துள்ளார்.

நிலைமையை சுமுகமாக்கி எமது பிரச்னைகளை சுலபமாக தீர்த்துவைக்க, மாணவர்கள் இடமளித்து வழிவிடவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

# கரிதினல் கூரே தாயகம் திரும்பினர்

கொழும்பு, வியா.

ரோமுக்குச் சென்றிருந்த அதிசங்கைக்குரிய கரிதினல் தோமஸ் கூரே இன்று பிற்பகல் நாடு திரும்பினர். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இவருக்கு இன்று பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ராஜியத் தூதுவர்களும், அரசாங்க உயர் அதிகாரிகளும் முக்கிய பிரமுகர்களும் பொது மக்களும் இவரை எதிர்கொண்டு வரவேற்றனர். கவர்னர் ஜெனரல் சார்பில் அவரது பிரதிநிதி திரு. ஜயவர்த்தனவும், பிரதம மந்திரி சார்பில் நீதிமந்திரி சில்வாவும் இந்த வரவேற்பில் கலந்து கொண்டனர்.

மோட்டாரில் அவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். சகல பாதைகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

# லைசென்ஸ் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம்

யாழ்ப்பாணம், வியா

கார்ச் சாரதி பயிற்சிச்சாலை ஒன்று நடத்துவதற்கான பத்திரத்தை நிரப்பி தனிப்பட்டவரின் பதிவுச் சான்றுப்பத்திரம் பெறுவதற்காக திரு. ஜெ. தர்மராசா என்பவர் யாழ். அரசாங்க அதிபருக்கு 1962ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் விண்ணப்பித்திருந்தார். அதற்குப் பிறகு அவர் பலமுறை இந்த விஷயமாக நேரடியாகவும் தபால் மூலமாகவும் நினைவூட்டிவந்தார். அதற்கு ஒரு விதமான நடவடிக்கையும் எடுத்ததாக விண்ணப்பகாரருக்கு அறிவிக்கப்படவில்லை. ஆனால் சில வாரங்களுக்கு முன்னர் அந்த விண்ணப்பதாரருக்கு வருமானவரி இலாகாவிலிருந்து அவர் நடத்தும் கார்ச் சாரதி பயிற்சிச்சாலை கணக்கு விபரங்களைக் காட்டும்படி கடிதம் ஒன்று வந்தது. மேற்கூறப்பட்ட லைசென்ஸ் கிடைக்காததால் அவர் அந்த பயிற்சிச்சாலையை ஆரம்பிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வருமானவரிக் கடிதத்தைக் கண்ட நபர் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் கந்தோருக்குச் சென்றபோது அவரை அடுத்த நாள் வருமாறு அதிகாரிகள் கட்டளையிட்டனர். அப்படியே அவர் மறுநாள் சென்றபோது அவரை ஓர் அதிசயம் காத்திருந்தது.

அவர் 1962ம் ஆண்டு டிசம்பர் மாதம் விண்ணப்பித்ததற்குரிய லைசென்ஸ் 12ந் தேதி ஜூன் மாதம் 1963ம் ஆண்டென எழுதப்பட்டு பைலில் குத்தப்பட்டிருந்தது. அதனை அவருக்கு 1965ம் ஆண்டு 8ந் தேதி மார்ச் மாதம் யாழ். அரசாங்க அதிபர் காரியாலயத்தினர் வழங்கினர். இரண்டு வருடங்களுக்குப் பின்னர் கிடைத்த லைசென்ஸ் தனக்கு ஒருவித பயனும் அளிக்கப் போவதில்லையென்று விண்ணப்பதாரர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

# கூட்டு அரசாங்கத்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பதில்: இல்லை. ஆங்கிலம் நம்நாட்டு மக்களின் மொழி அல்ல.

கேள்வி: இலங்கை மூன்று மொழிகளையும் கொண்ட சிறிய தீவு. எனவே சுவிட்சர்லாந்தில் உள்ளபடி இந்த மூன்று மொழிகளையும் உத்தியோக மொழிகளாகக் கொண்டால் என்ன?

பதில்: நம்நாட்டில் மக்கள் பேசும் மொழி இரண்டுதான். தமிழுக்கு சரியான இடம் அளிக்கப்படும். அதேசமயம் நாட்டின் தென்பகுதியில் செய்யப்படுவது போல் கலப்பு அரசாங்கம் தமிழ் மக்களின் கலை, கைப்பணித்துறையை ஊக்குவிக்க முயற்சிகளை மேற்கொள்ளும்.

# "சமஷ்டி என்ற இணைப்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பதையும் தமிழ்பேசும் மக்கள் தங்கள் இழந்த உரிமைகளைப் பெறும்வரை அவர்களின் பிரதிநிதிகளாகிய தமிழரசுக்கட்சியினர் எந்த அரசாங்கத்துடனும் ஒத்துழைக்கமாட்டார்கள் என்பதையும்சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்பின்றி நாட்டில் சமாதானமும் பொருளாதார முன்னேற்றமும், சுபீட்சமும் ஏற்படமுடியாதென்பதையும் இன்றைய சிங்கள அரசியல்கட்சிகளும் சகல சிங்கள அரசியல்வாதிகளும் பரிபூரணமாக உணர்ந்துவிட்டார்கள் என்றார்.

பருத்தித்துறைத் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. க. துரைரத்தினம் பேசுகையில், "நமது இலங்கைத்தீவு பொருளாதார வளம் மிகுந்தது என்று எவருடனும் வாதாட தான் முன்வருவதாகவும் அர்த்தமற்ற கதைகளைக் கூறி நம் இனத்தைப் பூச்சாண்டி காட்டுகிறார்களென்றும் கூறினர். தமிழ்ப் பிரதேசத்தில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, நிலம் வழங்கள் விதிகளைத் தளர்த்தித் தமிழ் பேசும் இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட ஊக்கம் அளிக்கப்படவேண்டும் என்றும் நவீன மீன்பிடி முறைகளில் தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து அவர்கள் தொழில் ஆரம்பிப்பதற்கு ஏற்ற வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்" என்றும் கூறினர்.

செனட்டர் மாணிக்கம் பேசியபின் மலையகத் தமிழர் திரு. தென்னரசு பேசுகையில் 'மலைநாட்டுத் தமிழ மக்களின் ஆதரவைப்பெறுவதற்காக 1948-ல் கொழும்பு நகர மண்டபத்தில் நான் அன்றும் இன்றும் என்றும் ஓர் இந்தியன் என்று நிர்தட்டிப் பேசியவர் அந்கூற்றை இன்று ஏன் மறுக்க வேண்டும்? என்ருர்.

அட்வகேட் திரு. ஆலாலசுந்தரம். செல்வி கலாமாணிக்கம், திருவாளர்கள் சுந்தரம், கவிஞர் காசி ஆனந்தன், மெய்யசன், சிவஞானசுந்தரம் ஆகியோரும் பேசினர். கூட்டத்திற்கு திரு. பொ. மயில்வாகனம் தலைமைவகித்தார்.

# "பேக்கிங் பவுடர்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாகுல் ஹமீட் சாட்சியமளித்தபோது கூறியதாவது-

சம்பவம் நடந்ததினம் நான் கொழும்பிலிருந்து தலைமன்னார் வந்தேன். காலஞ்சென்ற ஆரோக்கியத்தை எனக்கு சிறுவயதுமுதல் தெரியும். 1-ம், 2-ம் எதிரிகளையும் தெரியும். எதிரிகளின் சகோதரன் மரியான் அந்தோனிப்பிள்ளையையும் தெரியும். சம்பவம் நடப்பதற்கு 10 நாட்களுக்குமுன் அந்தோனிப்பிள்ளையைக் கொழும்பில் சந்தித்தேன். அவர் 'பேக்கிங் பவுடர்' பார்சல்களை காலஞ்சென்ற ஆரோக்கியம் எடுத்துவிட்டதாக கூறினர். எனது தாயாருக்கு சுகமில்லாதபடியால்தான் தலைமன்னார் வந்தேன். அந்தோனிப்பிள்ளைக்கு நான் 800 ரூபாய் கொடுக்கவேண்டும். அதற்குப் பதிலாக 'பேக்கிங்' பவுடர் பார்சல்களை கொடுத்தேன். காலஞ்சென்றவர் அப் பார்சல்களை திருடிவிட்டதாக என்னிடம் அந்தோனிப்பிள்ளை கூறினர் அன்று காரில் தலைமன்னார் வந்தேன். குருநாகலில் இருந்து ஒரு காரை 150 ரூபாவிற்கு வாடகைக்கு அமர்த்தி தலைமன்னார்வந்தேன் காரில் வேறு மூன்று பேர்களும் வந்தார்கள். தலைமன்னார் வந்ததும் அந்தோனிப்பிள்ளையை சந்தித்தேன். 1-ம், 2-ம் எதிரிகளையும் அங்கு சந்தித்தேன். நான் கீழ்க் கோர்ட்டிலும் இவ்வழக்கு சம்பந்தமாக சாட்சியமளித்துள்ளேன். நானும், அந்தோனிப் பிள்ளையும் காலஞ்சென்றவரின் கடைக்குச் சென்றோம். எதிரிகளும் வந்தார்கள். அந்தோனிப்பிள்ளை போய் பார்சலைப்பற்றி ஆரோக்கியத்திடம் கேட்டார். நான் காலஞ்சென்றவரிடம் பார்சலை கேட்கவில்லை. நான் அச்சமயம் வெளியில் நின்றேன், அன்று நான் கடைக்குள்போகவில்லை. அதன்பின் நாங்கள் இவ்விஷயத்தை அருளப்பு என்பவரிடம் கூறி அவரைக் கூட்டிவந்தோம். 250 ரூபா தந்தால் பார்சலைத் தருவதாக காலஞ்சென்றவர் கூறுவதாக அருளப்பு கூறினர். "எப்படி 250 ரூபா கொடுக்கமுடியும்" என்றேன. அதன்பின் 150 ரூபாய் கொடுக்கும்படி அருளப்பு கூறினர். நான் 150 ரூபாய் அருளப்புவிடம் கொடுத்துவிட்டு 3 பார்சல்களையும் எடுத்துக்கொண்டேன். நான் கட்டிய மாதிரி பார்சல்கள் இருந்ததால் திறந்து பார்க்கவில்லை. இச்சம்பவம் முடிந்தபின் நான் கொழும்பு சென்று பார்சல்களைத் திறந்து பார்த்தபோது மண்ணும் சாம்பலும் இருந்தன. இதனால் எனக்கு 450 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.

எதிரிகள்பக்க சாட்சியாக மீண்டும் செபமாலை அந்தனி [illegible] டயஸ் அழைக்கப்பட்டார்.

மேல் விசாரணை 15-ம் திகதி திங்கட்கிழமை காலை வரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

# கப்பல் திருப்பிவிடப்பட்டது

கராச்சி, மார்ச் 12

அமெரிக்காவிலிருந்து 37,000 டன் கோதுமையுடன் பாகிஸ்தான் வந்த கப்பல், அந்த நாட்டின் வேண்டுகோள்மீது இந்தியாவுக்குத் திருப்பிவிடப்பட்டிருக்கிறது.

# கோமகனுக்கு விருந்து

புதுடில்லி, மார்ச் 12

பிரதம மந்திரி கேந்திரவு எடின்பரோ கோமகனுக்கு விருந்தளித்தார்.


அன்புடை வாசகர்களே!

**வாசித்துவிட்டீர்களா?**

**கல்கி**

10-1-65, 17-1-65, 24-1-65, 31-1-65.

**குமுதம்**

7-1-65, 14-1-65, 21-1-65, 28-1-65, 4-2-65

இவ்விதழ்கள்

இப்பொழுது விற்பனையாகின்றன.

இவற்றைப் பெறத்தவறிவிட்டவர்கள் காலந்தாழ்த்தாது தபால் மூலம் பெற்றுக்கொள்ள குமுதம் பிரதிஒன்றிற்கு 30 சத முத்திரை வீதமும் கல்கி பிரதி ஒன்றிற்கு 35 சத முத்திரை வீதமும் அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

கிடைக்குமிடம்:

**த. தம்பித்துரை**

நியூஸ் ஏஜென்ட்

226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது